# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 106
தொலைபேசி எண். 2475 3001 நிகரி 2475 3300, 24751870
மின் அஞ்சல் tnsec@tn.nic.in இணையதளம் www.tnsec@tn.nic.in

---

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 19 /2011** **நாள். 26.09.2011**

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் 17.10.2011 மற்றும் 19.10.2011 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை செய்வதற்காக மாநில காவல் துறை இயக்குநர் மற்றும் காவல் துறை உயர் அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னை கோயம்பேட்டிலுள்ள மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலகத்தில் மாநிலத் தேர்தல் ஆணையர் முனைவர்.சோ.அய்யர், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் தலைமையில் இன்று (26.09.2011) நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை சுதந்திரமாகவும், அமைதியாகவும், நியாயமாகவும் நடத்த முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை செவ்வனே செய்தல், வாக்குச்சாவடி மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றவை குறித்து ஆலோசனை செய்யப்பட்டன.

மேலும், வாக்குச்சீட்டுகளை அச்சடிக்கும் அரசு அச்சகங்களுக்கும், அங்கிருந்து வாக்குசீட்டுகளை விநியோக மையங்களுக்கு எடுத்து செல்லும்போதும் கூடுதல் பாதுகாப்பு அளித்தல், வாக்குச்சாவடிகளுக்கான தளவாட பொருட்களை விநியோகிக்கும் மையங்கள், வாக்குச்சீட்டுகள் உள்ள பெட்டிகளை வைக்கும் அறை, ஆகியவற்றில் பாதுகாப்பினை பலப்படுத்துதல், குறித்தும் விவாதிக்கப்பட்டன.

பதட்டமான வாக்குச்சாவடிகளை கண்டறிதல், பொது மக்கள் புகார் கொடுக்க ஏதுவாக மாவட்டங்களில் உள்ள காவல் துறையினரின் தொடர்பு எண்கள், தேர்தல் நன்னடத்தை விதி முறைகளை முழுமையாக அமல்படுத்துதல்,

வேட்பாளர்களுக்கு பாதுகாப்பளித்தல், பொதுக்கூட்டங்கள், பேரணிகள் போன்றவறிக்கு அனுமதி அளித்தல் / முறைப்படுத்துதல், ஒலிப்பெருக்கி மற்றும் வாகனங்கள் பயன்படுத்த அனுமதி வழங்குதல், வாக்குச்சாவடிகளில் கள்ள ஓட்டுப்போடுவதை தடுத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், துப்பாக்கி போன்ற ஆயுதங்களை தேர்தலுக்கு முன் காவல் துறையினரிடம் ஒப்படைத்தல், தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரசார பயனம் மேற்கொள்ளும் அரசியல் தலைவர்களுக்கு தேவையான பாதுகாப்பு அளித்தல், தேர்தல் காலங்களில் திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகளை கண்காணித்தல், தேவையான இடங்களில் தொடர்ந்து வாகன சோதனை மேற்கொள்ளுதல் போன்றவை குறித்தும் கலந்தாலோசனை செய்யப்பட்டது.

தேர்தல் காலங்களில் மது விற்பனையை கண்காணித்தல், அரசு வாகனங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துவதை தடுத்தல், மாநில எல்லைகளில் பாதுகாப்பை அதிகரித்து கண்காணித்தல், தேர்தல் பணிக்கு செல்லும் காவல் துறையினருக்கு பயிற்சி அளித்தல் உட்பட பல்வேறு இனங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திரு.வே.மு,சேவியர் கிறிசோ நாயகம், இ.ஆ.ப., காவல் துறை தலைமை இயக்குநர் திரு.கே.ராமனுஜம்,இ.கா.ப, காவல்துறை கூடுதல் தலைமைஇயக்குநர் (உளவுதுறை) திரு.டி.ராஜேந்திரன், இ.கா.ப, சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு.ஜே.கே. திரிபாதி, இ.கா.ப, காவல்துறை கூடுதல் தலைமைஇயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு. எஸ்.ஜார்ஜ், இ.கா.ப, காவல்துறைத் தலைவர் (வடக்கு மண்டலம்) திரு.சைலேந்திரபாபு, இ.கா.ப, காவல்துறை தலைவர் (தேர்தல்கள்) திரு.அலெக்ஸாண்டர் மோகன், இ.கா.ப, காவல்துறை கண்காணிப்பாளர் (தேர்தல்கள்) திரு. கே.மோகன் இ.கா.ப, உட்பட பலரும் கலந்து கொண்டார்கள்.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

(ஒம்) லோ.கிருஷ்ணமூர்த்தி,
மக்கள் தொடர்பு அலுவலர்